மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பு

# சூழ்நிலையின் துரித மதிப்பிடல்

(Rapid Context Assessment )

ஏப்ரல் 2009

CONSORTIUM OF CHA HUMANITARIAN AGENCIES (GTE) LIMITED

ISO 9001 REGISTERED

## தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு


| | |
|---|---|
| அரசியல் சூழ்நிலை | 2 |
| ஆட்சிமுறைமை | 2 |
| பாதுகாப்பு | 3 |
| மனித உரிமைகள் | 3 |
| பொருளாதார சூழ்நிலை | 4 |
| சுற்றுச்சூழல் | 4 |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | 5 |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம் | 5 |
| வெளிச் செயற்பாட்டாளர்கள் | 6 |

மாவட்டங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 6 |
| மட்டக்களப்பு | 7 |
| கொழும்பு | 7 |
| யாழ்ப்பாணம் | 8 |
| மன்னார் | 8 |
| திருகோணமலை | 9 |
| வவுனியா | 9 |


## தற்காலப் போக்குகளின் பகுப்பாய்வுச் சட்டகம்

| | |
|---|---|
| அரசியல் சூழ்நிலை | → |
| ஆட்சிமுறைமை | ↘ |
| பாதுகாப்பு | → |
| மனித உரிமைகள் | → |
| பொருளாதார சூழ்நிலை | ↘ |
| சுற்று ச்சூழல் | → |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | ↗ |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம் | ↘ |
| வெளிச் செயற்பாட்டாளர்கள் | ↘ |

சுட்டிகளின் அடையாளம்

# முக்கிய சாராம்சம்



ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தின் உறுதியான மேல் மாகாண சபைத் தேர்தல் வெற்றியானது அரசாங்கத்தின் அரசியல் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. எனினும், வாக்களிப்பு நீதியானதாகவும், அமைதியான முறையிலும் நடைபெற்ற போதிலும், தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் எதிர்மாறானதாகவே இடம்பெற்றன. ஆளும் கட்சி அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்ததுடன், சில வன்முறைகளை பொலிஸாரினால் கட்டுப்படுத்த முடியாமலும் போனது. தேர்தல்கள் ஆணையாளரும் முழுமையாக செயற்றிறன் அற்றவராகவே காணப்பட்டார். எனினும், சுதந்திர தேர்தல்கள் ஆணைக்குழு, பொது சேவைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் ஆணைக்குழு என்பனவே 17ஆவது திருத்தத்தின் கீழ் இந்த முறையை சரிசெய்வதற்கான நம்பிக்கையை அளிக்கின்றன.

தென் மற்றும் ஊவா மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இவ்வருடத்தின் இறுதிப் பகுதியில் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் பாராளுமன்றப் பொதுத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் நடத்தப்படுவதற்கான சாத்தியங்களும் காணப்படுகின்றன. பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று அரசியலமைப்பில் திருத்தங்களை கொண்டு வருவதற்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளது. இணைந்த விகிதாசார பிரதிநிதித்துவ முறை மற்றும் பிரதேசவாரி பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் மூலம் உறுப்பினர் ஒருவரை உள்;ராட்சி சபைக்கு தெரிவுசெய்து அதன் பின்னர் மாகாண சபைக்கு தெரிவு செய்து, பின்னர் பாராளுமன்றத்துக்கு செல்லும் முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ள நிலையில் சிறிய கட்சிகள் அதற்கு பெரும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன.

பாதுகாப்பு முன்னரங்கில் எல்.ரி.ரி.ஈ யினரை சில சதுர கிலோமீற்றருக்குள் யுத்த சூனிய வலயத்திற்குள் அரசாங்க படையினர் கட்டுப்படுத்தியுள்ளனர். எல்.ரி.ரி.ஈயினர் அமைத்திருந்த மண்அணையை தகர்த்து சுமார் ஒரு இலட்சம் பொதுமக்களை அரசாங்க படையினர் மீட்டிருந்தனர். எனினும், சுமார் 20ஆயிரம் தொடக்கம் 50ஆயிரம் வரையான பொதுமக்கள் தொடர்ந்தும் அந்த பகுதியில் சிக்கியுள்ளதாக அறியக் கிடைக்கின்றது. இவர்கள் அரசாங்கப் படையினருக்கும், எல்.ரி.ரி.ஈயினருக்கும் இடையிலான மோதலில் பாதிக்கப்படுவதனையும் அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. இதேவேளை, புலம்பெயர்ந்து மேற்கத்தைய நாடுகள் பலவற்றில் குடியேறியுள்ள இலங்கைத் தமிழர்கள் யுத்தத்தை நிறுத்துமாறு வலியுறுத்தி பல ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். ஐக்கிய நாடுகள் மற்றும் மேற்கத்தைய நாடுகள் சிலவற்றின் தூதர்கள் இலங்கைக்கு விஜயம் செய்ததுடன், வவுனியாவுக்குச் சென்று உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளவர்களின் நிலமைகளை கேட்டறிந்தனர். அத்துடன் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதற்கு ஐக்கிய நாடுகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அரசாங்கம் மேலதிக அனுமதியை வழங்கியுள்ளது. அத்துடன் சிவில் அதிகாரிகளை மேலதிகமாக பணிக்கு அமர்த்தியுள்ளதுடன், உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளோர் தங்கியுள்ள முகாம்களில் இராணுவத்தினரின் பணிகளையும் மட்டுப்படுத்தியுள்ளது.

அத்துடன், தற்போது முன்னெடுக்கப்படும் மீட்புநடவடிக்கையில் கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. பொதுமக்களுக்கு ஏற்படும் உயிராபத்துக்களை குறைப்பதற்காகவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறியுள்ள அரசாங்கம், பொதுமக்களை மீட்பதற்கான யுத்த நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது எனவும் தெரிவித்துள்ளது. எனினும், இந்த தீர்மானங்கள் யுத்த களத்தில் அமுல்படுத்தப்படவில்லை எனவும் சிலர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

முன்னர், எல்.ரி.ரி.ஈயினரின் தலைநகராகவிருந்த கிளிநொச்சிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ விஜயம் செய்தமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக கருதப்படுகின்றது.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளா-தார சிக்கல் நிலையை தீர்ப்பதற்கு ஏப்ரல் மாதத்தில் அரசாங்கம் பெருமுயற்சி கொண்டது. தேசத்தின் சர்வதேச சேமிப்புகள் சில வாரங்களுக்கான இறக்குமதிக்கு மாத்திரமே போதுமானதாக இருந்தன. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கை 1.9பில்லியன் அமெரிக்க டொலர்களை பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளும் நிறைவடைந்துள்ளன. இலங்கை அரசாங்கம் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாக கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருவதால் கடனுதவி வழங்குதலை ஒத்திவைப்பதா அல்லது நிறுத்துவதா என்பது தொடர்பில் இறுக்கமான சூழ்நிலையும் காணப்படுகின்றது. அத்துடன் லிபியாவிடமிருந்து 500மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவியையும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துடன் 810 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எண்ணெய் ஹெட்ஜிங் ஒப்பந்தம் செய்துள்ள இரண்டு வெளிநாட்டு வங்கிகள், பணத்தை மீளப்பெறுவதற்காக சர்வதேச விசாரணைகளை நாடியுள்ளன. தேசிய கட்டட வரியை 1% இலிருந்து 3% ஆக அரசாங்கம் அதிகரித்துள்ளது. வர்த்தகத்தின் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மீளவழங்கலில் தாமதம் காணப்படுவதாகவும் வர்த்தக நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாற்றம் இல்லை | → | சிறிது மேம்பட்டுள்ளது | ↗ | சிறிது சீர்கெட்டுள்ளது | ↘ |
| கணிசமானளவு மேம்பட்டுள்ளது | ↑ | கணிசமானளவு சீர்கெட்டுள்ளது | ↓ | | |

பணவீக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளமையையும் மத்திய வங்கி உறுதிசெய்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் பணவீக்கம் 2.9வீதமாக காணப்பட்டது. உலக பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட வர்த்தகத்துக்கு உதவி செய்யும் வகையில் வங்கி குத்தகையில் விதித்திருந்த கட்டுப்பாடுகளை மத்திய வங்கி தளர்த்தியுள்ளது. எவ்வாறாயினும், வங்கியின் பிரதான பெறுமதி தொடர்ச்சியாக ஒட்டிய தீர்மானமில்லாத 19வீதமாக காணப்படுகின்றது. யுத்தம் முடிவை நெருங்கியுள்ளமை காரணமாக பங்கு பெறுமதிகள் இந்த மாதத்தில் சாதகமான பெறுபேறுகளை சுட்டி மேல்நோக்கி நகர்கின்றது. எவ்வாறாயினும், ஏற்றுமதி துறையில் தொடர்ந்தும் வேலையாட்கள் நீக்கப்படுவதுடன், வேலைநேரமும் குறைக்கப்பட்டு வருகின்றது.

புயலும், சிறிய அளவிலான வெள்ளப்பெருக்கும் நாட்டின் பல பகுதிகளில் சொத்துக்களுக்கு சேதத்தை ஏற்படுத்தின. இரண்டு சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் கிழக்கிலும் மற்றையது சீகிரியாவிலும் உணரப்பட்டன. இதன் காரணமாக கட்டடத் துறையில் எச்சரிக்கை நிலை தோன்றியுள்ளதுடன், குறித்த பகுதிகளில் புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும் போது நிலநடுக்கம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட வேண்டியதன் தேவை ஏற்பட்டுள்ளது.
கொழும்பில் திண்மக் கழிவுகளை அகற்றுவதில் நெருக்கடி நிலை தோன்றியது. கொழும்பு மாநகர சபை புதிதாக கழிவுகளை சேமிப்பதற்காக ஒதுக்கிய பகுதிக்கு அயலில் வசிப்பவர்கள் எதிர்ப்பை காட்டியதையடுத்தே இந்த நிலை உருவெடுத்தது. வவுனியாவில் இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களுக்காக கண்மூடித்தனமாக காடுகள் அழிக்கப்படுவது எதிர்மறையான சூழல் தாக்கத்தை உருவாக்கியுள்ளது. அத்துடன், கடந்த மாதம் நடைபெற்ற மேல் மாகாண சபைத் தேர்தலில் சுவரொட்டிகள், பதாகைகள், பொலித்தீன் அலங்காரங்கள் என்பன குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்டமை சாதகமான மாற்றமாக காணப்படுகின்றது.

# தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு 28/03/2009 – 28/04/2009

## அரசியல் சூழ்நிலை

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அல்லது “சந்தானய” என்ற பெயரில் வெகுவாக அறியப்பட்ட கட்சியின் தொடர் வெற்றிகள் பாராளுமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் வரிசையில் ஸ்திரமான, முதன்மையான இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இவை தற்போதைய அரசாங்கத்தின் அரசியல் எதிர்காலத்திற்கு சாதகமான தன்மையை உருவாக்கிக் கொடுத்துள்ளன.

மேல் மாகாண சபைத் தேர்தல்களும் நிறைவடைந்துள்ள நிலையில் தென் மற்றும் ஊவா மாகாண சபைத் தேர்தல்களே எஞ்சியிருக்கின்றன. இவ்விரண்டு மாகாண சபைகளும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் கலைக்கப்பட்டு செப்டம்பர் மாத இறுதிப் பகுதியில் அல்லது ஒக்டோபர் மாத முதல் வாரமளவில் அந்த மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கிலும் பல வருடங்களுக்குப் பின்னர் மாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதற்கு சாதகமான காரணிகள் நிறையவே காணப்படுகின்றன. எனினும், 2010 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே இந்தத் தேர்தல் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆட்சிப்பீடத்தில் நிலையான இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ள அரசாங்கம் 9 மாகாண சபைகளில் 6 மாகாண சபைகளை வெற்றி கொண்டுள்ளது. அத்துடன் எல்.ரி.ரி.ஈயினருடனான யுத்தவெற்றிகள் பாராளுமன்ற பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான சான்றுகளையும் அதிகரித்துள்ளன.
இவ்வருடம் நவம்பர் மாதம் 19 ஆம் திகதிக்கும் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்தத் தேர்தல்கள் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தனது பதவிக்காலத்தில் நான்கு வருடங்கள் முடிவடைந்த பின்னர் மீண்டும் ஒருமுறை பதவி வகிக்க தேர்தல் நடத்த ஏற்பாடு செய்கின்றது. (இறுதியாக ஜனாதிபதித் தேர்தல் 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது.) எனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நவம்பர் மாதத்திற்கு பின்னர் நடத்தப்படலாம்.

ஜனாதிபதிக்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான அதிகாரம் இருக்கின்ற போதிலும், அதனை தவிர்த்து பாராளுமன்றத்தின் 225 ஆசனங்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றி அரசியலமைப்பில் திருத்தங்களை கொண்டுவர முயற்சிக்கலாம் என்றும் அல்லது பாராளுமன்றம் மற்றும் பிரதமருக்கு அதிக அதிகாரங்களை வழங்கக் கூடியதாக புதிய அரசியலமைப்பை உருவாக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.
புதிய தேர்தல் சட்டங்களும் விகிதாசார பிரதிநிதித்துவ முறைகளில் இருந்து மாறி மீண்டும் பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை அமுல்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் மூலம் பாராளுமன்றத்தில் உறுப்புரிமை பெற்றுள்ள சிறிய அரசியல் கட்சிகளுக்கு இந்த முறை பாதகமானதாகவே அமைந்திருக்கும்.

பாராளுமன்ற பொதுத் தேர்தலில் இந்த தேர்தல் முறையை அமுல்படுத்துவதற்கு முன்னர் உள்ளுராட்சி சபை மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் இந்த முறையை அமுல்படுத்த திட்டமிருந்த அரசாங்கம், கிழக்கில் மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி சபை தேர்தல்களின் போது புதிய தேர்தல் முறையை அமுல்படுத்துவதற்கான விவாதத்தை நடத்திய வேளையில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் அதற்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியது. இவ்வாறான தேர்தல் செலவுகளால் பல நூறு மில்லியன் ரூபாய் நிதிநெருக்கடியில் இருக்கும் இலங்கை திறைசேரி, உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள சுமார் 2 இலட்த்து 50ஆயிரம் மக்களை மீளக்குடியேற்ற வேண்டிய மனிதாபிமான நெருக்கடியையும் சந்தித்துள்ளது.

## ஆட்சிமுறைமை

இன்னுமொரு குளறுபடியான தேர்தல் மேல் மாகாண சபைத் தேர்தல் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. எந்தவொரு பாராதூரமான தேர்தல் வன்முறைகளும் நடைபெறாத நிலையில் மாகாணம் முழுவதும் மிகவும் அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றது. எவ்வாறாயினும், தேர்தல் தினத்தின் போது இருந்த சூழ்நிலைக்கும் மாறான சூழ்நிலையொன்றே, தேர்தலில் போட்டியிட்ட அரசியற் கட்சிகளினதும், வேட்பாளர்களினதும் தேர்தல் பிரச்சாரங்களின் போது காணப்பட்டது.

விசேடமாக தேர்தல் காலங்களில் பொலிஸாரின் பங்கு மிகவும் முக்கியமானதொன்றாகும்.
நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு அவர்களது பாரபட்சமற்ற, சாமர்த்தியமான நடவடிக்கை அத்தியவசியமானதாகும். தேர்தலின் போதான சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்கு பொலிஸார் சில முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும், அந்த முயற்சிகள் போதுமானவையாக இருக்கவில்லை. குற்றம் புரிந்த பலர், விசேடமாக, ஆளும் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்படவில்லை. தேர்தல் சட்டங்கள் மீறப்படும் போது பொலிஸார், தேர்தல்கள் திணைக்களம் மற்றும் அரசியல் கட்சிகளுடன் இணைந்து மேலும் சாமர்த்தியமாக செயற்பட வேண்டும். அல்லாத பட்சத்தில், சுதந்திரமானதும், நீதியுமான தேர்தலில் தாக்கம் ஏற்படுவதுடன், தேர்தல் நடைமுறை தொடர்பில் மக்கள் மத்தியில் அவநம்பிக்கை ஏற்படுவதற்கும் வழிவகுக்கும்.

துரதிர்ஷ்டவசமாக, இவ்வாறான ஜனநாயகமற்ற, சட்டவிரோத நடத்தைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு மக்கள் அதிருப்தி மற்றும் பொது அமைப்புக்களின் தேர்தல் கண்காணிப்பு என்பனவற்றிற்கு மட்டுபடுத்தப்பட்ட அதிகாரங்களே உள்ளன. தாமும், தமது திணைக்களமும் தமக்களிக்கப்பட்ட ஆணைகளை நிறைவேற்றி நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு தமது அதிகாரம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் தொடர்ச்சியான அறிக்கைகளின் ஊடாக தெரிவித்து வருகின்றார். இந்த சூழ்நிலையை மாற்றுவதற்கு சட்டஒழுங்கு இயந்திரம் சுதந்திரமானதும், பாரபட்சமற்றதுமான முறையில் செயற்பட வேண்டும். இதன் காரணமாகவே 17ஆவது திருத்தத்தினை அமுல்படுத்துவதற்கான அழுத்தத்தை தொடர்ச்சியாக கொடுக்க வேண்டிய தேவை பொது அமைப்புக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் இருக்கின்றது. இது சுதந்திர பொலிஸ், தேர்தல்கள் மற்றும் பொது சேவைகள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படுவதனை ஆழ்ந்து யோசிக்க வைக்கின்றது. சுதந்திர நிறுவனங்கள், அதன் தேவைக்கேற்ப செயற்படுவதற்கான மதிப்பு என்பன நாட்டில் ஜனநாயகம் பேணப்படுகின்றது என்ற நம்பிக்கையை அதிகரிப்பதற்கு அத்தியாவசியமானவையாகும்.

## பாதுகாப்பு நிலை

அரசாங்க படையினர், எல்.ரி.ரி.ஈயினரை வெள்ளமுள்ளிவாய்க்கால் மற்றும் வேலையன்மடம் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட 10 சதுரகிலோமீற்றருக்குள் மட்டுப்படுத்தியுள்ளதுடன், எல்.ரி.ரி.ஈயினரை யுத்த சூனிய வலயத்தை நோக்கி நகர வைத்துள்ளனர். எல்.ரி.ரி.ஈ தலைவர் சரணடைவதற்கு 24 மணித்தியால காலஅவகாசம் வழங்கப்பட்ட போதிலும் அந்த இறுதி தீர்மானம் எவ்வித பலாபலனையும் அளிக்கவில்லை.

யுத்த சூனிய வலயத்தின் மேற்கு எல்லையில் புதுமாத்தளன் பகுதியில் எல்.ரி.ரி.ஈயினரின் 3 கிலோமீற்றர் நீளமான மண்அணையை இராணுவத்தின் 58ஆவது படைப்பிரிவினர் வெடிக்கச் செய்தனர். சுமார் ஒரு இலட்சம் பொதுமக்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வருவதற்கு இந்த நடவடிக்கை வழிவகுத்தது.
எல்.ரி.ரி.ஈயினருடனான கடும் மோதலுக்கு பின்னரே இராணுவத்தினர் இந்தப் பகுதியை அடைந்தனர். ஆளில்லா விமானத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே 58ஆவது படைப்பிரிவின் பொது அதிகாரி இந்த முன்னகர்வு மீட்பு நடவடிக்கையை திட்டமிட்டிருந்தார். இராணுவத்தினர் 8 தொடக்கம் 10 வீரர்கள் உள்ளடங்கும் வெவ்வேறு குழுக்களாக பிரிக்கப்பட்டு, அந்த குழுக்களுக்கு வெவ்வேறான நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டன. 9ஆவது கெமுனு வொட்ச் படையணி, 8ஆவது கஜபா படைப்பிரிவு, 11ஆவது இலங்கை சிற்றாயுத படைப்பிரிவு, 2ஆவது கொமாண்டோ படைப்பிரிவு, மற்றும் 1ஆவது விசேட படைகள் படைப்பிரிவின் உதவியுடன் முன்னகரும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். எல்.ரி.ரி.ஈயினரின் புதுமாத்தளன் முதல் அம்பலவாண்பொக்கை வரையான இறுதி மண்அணையை தகர்ப்பதே இந்த பிரிவின் முக்கிய இலக்காகவிருந்தது. 2ஆவது கொமாண்டோ படைப்பிரிவும், 8ஆவது கஜபா படைப்பிரிவும் மண்அணையின் வடக்கு முனையிலும், 1ஆவது விசேட படைகள் படைப்பிரிவும், 11ஆவது இலங்கை சிற்றாயுத படைப்பிரிவும் மண்அணையின் தென் பகுதியிலும், 9ஆவது கெமுனு வொட்ச் படையினர் முன்னேறுவதற்கான மற்றும் பொதுமக்கள் தப்பிவருவதற்கான பாதையை உருவாக்குவதிலும் ஈடுபட்டிருந்தன.
புதுக்குடியிருப்பை முழுமையாக கைப்பற்றியதன் பின்னர் மூன்று நாட்கள் நடைபெற்ற கடும் மோதலையடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இந்த கடும்மோதலில் எல்.ரி.ரி.ஈயினருக்கு பாரிய சேதம் விளைவிக்கப்பட்டது.
கொல்லப்பட்டவர்களில் எல்.ரி.ரி.ஈயினரின் சிரேஸ்ட உறுப்பினரான தீபன், எல்.ரி.ரி.ஈயின் முன்னாள் வடக்கு பகுதி தலைவர் ரூபன், நாகேஸ், எல்.ரி.ரி.ஈ தலைவரின் முன்னாள் மெய்பாதுகாவலர் கடாபி, மகளிர் படையணி தலைவியான விதூஷா, மகளிர் படைப்பிரிவின் தலைவி “மாலதி”, துர்க்கா, எல்.ரி.ரி.ஈ மகளிர் அரசியல் தலைவர் “சூதியா” கமலினி, எல்.ரி.ரி.ஈயின் ஆட்டிலறி பிரிவு தலைவர் மணிவண்ணை ஆகியோரும் அடங்குகின்றனர்.
புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் எல்.ரி.ரி.ஈயினர் இலகுரக விமானம் ஒன்றை யுத்த சூனிய வலயத்தில் வைத்திருப்பதாக அறியக் கிடைத்துள்ளது.

கொலை செய்யப்பட்ட எல்.ரி.ரி.ஈயினரின் எண்ணிக்கையை அறிவித்த அரசாங்கம் உயிரிழந்த படைவீரர்களின் எண்ணிக்கையை சொல்லத் தவறியுள்ளது.
உத்தியோகப்பற்றற்ற தரவுகளின் அடிப்படையில் காயமடைந்த சுமார் 540 படைவீரர்கள் மார்ச் 3ஆம் திகதி கொழும்புக்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.
அம்பாறையில் விசேட அதிரடிப்படையினருடனான மோதலில் 13எல்.ரி.ரி.ஈயினர் உயிரிழந்தனர். அண்மைக் காலங்களில் புத்தல, மொனராகலை மற்றும் கிழக்கின் பல பகுதிகளில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு இந்த குழுவினரே காரணமாக இருந்திருக்க வேண்டும் என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள், அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் கோரிக்கைகளை நிராகரித்து வந்த அரசாங்கம், 27 ஆம் திகதி திங்கட்கிழமை யுத்த நடவடிக்கைகளில் கனரக ஆயுதங்களின் பாவனையை முற்றுமுழுதாக நிறுத்திக் கொள்வதாக அறிவித்தது. இந்த விடயம் பிபிசி சேவைக்கு பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஸ வழங்கிய செவ்வியினூடாக உறுதி செய்யப்பட்டது.

இந்த மாதத்தில் நடைபெற்ற மற்றுமொரு முக்கியமான விடயம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் கிளிநொச்சி விஜயம். இந்த விஜயத்தின் போது இராணுவத்தினரையும், அப்பகுதியில் இடம்பெயர்ந்திருந்த பொதுமக்களையும் ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமைகள்

மார்ச் மாதம் 21 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி வரையான மனித உரிமைகள் ஆய்வு.

**கீழுள்ள அட்டவணையானது அச்சு மற்றும் இலத்திரனியல் செய்தி ஊடகங்களில் (டெய்லி மிறர், த ஐலண்ட், டெய்லி நியூஸ், வீரகேசரி, தினக்குரல், சுடரொளி, உதயன் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்) அறிக்கையிடப்பட்ட மனித உரிமை மீறல்களைத் தெரிவிக்கின்றது.**

கைது (160)

| | |
|---|---|
| அம்பாறை49 | |
| கொழும்பு | 36 |
| புத்தளம் | 26 |
| ஹம்பாந்தோட்டை | 14 |
| மாத்தறை | 08 |
| மன்னார் | 05 |
| கம்பஹா | 04 |
| வவுனியா | 04 |
| அனுராதபுரம் | 04 |
| கண்டி | 03 |
| மாத்தளை03 | |
| திருகோணமலை | 02 |
| காலி | 01 |
| நுவரெலியா | 01 |

கடத்தல் (14)

| | |
|---|---|
| அம்பாறை | 03 |
| மன்னார் | 03 |
| கொழும்பு | 03 |
| மட்டக்களப்பு | 02 |
| யாழ்ப்பாணம் | 01 |
| வவுனியா | 01 |
| புத்தளம் | 01 |

காயப்படுத்தல் (953)

| | |
|---|---|
| முல்லைத்தீவு | 934 |
| களுத்துறை | 04 |
| மட்டக்களப்பு | 04 |
| பொலன்னறுவை | 04 |
| யாழ்ப்பாணம் | 03 |
| திருகோணமலை | 02 |
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 01 |

காணாமல் போதல் (9)

| | |
|---|---|
| மன்னார் | 04 |
| அம்பாறை | 02 |
| யாழ்ப்பாணம் | 01 |
| மட்டக்களப்பு | 01 |
| காலி | 01 |

கொலைகள் (198)

| | |
|---|---|
| முல்லைத்தீவு | 138 |
| மொனராகலை | 12 |
| திருகோணமலை | 07 |
| களுத்துறை | 06 |
| அம்பாறை | 06 |
| பொலன்னறுவை | 05 |
| வவுனியா | 04 |
| காலி | 04 |
| மட்டக்களப்பு | 04 |
| குருநாகல் | 03 |
| கொழும்பு | 02 |
| கம்பஹா | 02 |
| மன்னார் | 02 |
| கண்டி | 01 |
| புத்தளம் | 01 |
| நுவரெலியா | 01 |

**கொலைகள்**

| | |
|---|---|
| குண்டுவெடிப்பினால் | 137 |
| துப்பாக்கிச் சூடு | 50 |
| கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் | 11 |

(மேலதிக தகவல்கள் புள்ளிவிபரங்களிற்கு: hrac1@cha.lk ஐ தொடர்பு கொள்ளவும்.)

# பொருளாதாரச் சூழ்நிலை

ஏப்ரல் மாதத்தில் இலங்கையின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைவதற்கான பல அறிகுறிகள் தென்பட்டன. சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கம் பெறுவதற்கு முயற்சித்து வருகின்ற 1.9பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவி கிடைக்காத பட்சத்தில் பொருளாதார நிலைமை மேலும் மோசமடையக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவி பெறுவதற்கு நுணுக்கமான பேச்சுவார்த்தைகள் அனைத்தும் மாத இறுதியில் முடிவடைந்துள்ளன. வடக்கில் நிலமையை கருத்திற் கொண்டு, சர்வதேச நாணய நிதியம் கடனுதவியை வழங்குவதா? இல்லையா? என்ற அழுத்தத்தை எதிர்நோக்கியுள்ளது. அத்துடன், லிபியாவிடமிருந்து 500மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனுதவியாக பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளும் நடைபெற்று வருகின்றன.

2009ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் குறிப்பிட்டதற்கு அமைய அரசாங்கத்தின் வருமானத் தேவைக்காக தேசிய கட்டட வரியை 1வீதத்திலிருந்து 3 வீதமாக அரசாங்கம் அதிகரித்துள்ளது. அத்துடன் வரிகளில் மாற்றங்களையும் கொண்டு வந்துள்ளது. பொருட்களின் விலை அதிகரிப்பதாக பொதுமக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு தெரிவித்து வந்ததையடுத்து பொருட்களின் விலை குறைக்கப்பட்டாலும், வருமானத்தை வேறு வழிகளில் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அரசாங்கம் மீள வழங்க வேண்டிய பெறுமதி சேர் வரியை ஒப்படைப்பதில் தாமதத்தை கடைப்பிடித்து வருவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கமும், ஐந்து வர்த்தக வங்கிகளும் சம்பந்தப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடனான ஹெட்ஜிங் எண்ணெய் உடன்படிக்கை, சிட்டிபேங்க் மற்றும் டச்பேங்க் ஆகியன தமக்கான பணத்தை விரைவில் ஒப்படைக்குமாறு கோரி சர்வதேச விசாரணைகளை கோரியதையடுத்து முறிவடைந்துள்ளது. அரசாங்கத்தின் கீழ் இயங்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உடன்படிக்கைக்கு அமைய 810மில்லியன் அமெரிக்க டொலர்களை வட்டியுடன் சேர்த்து வழங்க வேண்டும். இந்த தொகை இலங்கையின் வெளிநாட்டு சேமிப்பின் அரைப்பகுதிக்கும் மேற்பட்டதாகும். இந்த தொகை திருப்பி வழங்கப்படுவதானது தள்ளாடி வரும் இலங்கையின் பொருளாதாரத்தில் மேலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.
இலங்கையின் பணவீக்கம் தொடர்ச்சியாக 10ஆவது மாதமாகவும், ஏப்ரல் மாதத்தில் 2.9வீதமாக வருடாந்த ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும், நாணய பெறுமதியின் வீழ்ச்சி எதிர்வரும் மாதங்களில் பணவீக்க அதிகரிப்புக்கு காரணமாக அமையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய வங்கி பணவீக்க வீழ்ச்சியை உறுதியாக நம்பியிருப்பதோடு, வங்கி குத்தகையை ஊக்குவிக்க திட்டமிட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தில் வங்கிகள் மீள்கொள்வனவு வீதத்தை 10.25வீதத்திலிருந்து 9வீதமாக குறைத்துள்ளது. அத்துடன் அபராத வீதத்தை 14.75வீதத்திலிருந்து 13வீதமாகவும் குறைத்துள்ளது. அரச வங்கிகள் குத்தகை பெறுமதியை முன்னுரிமை துறைகளுக்கு 3 வீதத்திலிந்து 2 வீதமாக குறைத்துள்ளன. எவ்வாறாயினும், வர்த்தக வங்கிகளின் பிரதான பெறுமதிகள் ஏப்ரல் மாதத்தில் சராசரியாக 19வீதமாக காணப்பட்டது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவும் வகையில், தனியாருக்கான செயற்றிறனற்ற கடன்களின் கால எல்லையை 3 மாதங்களில் இருந்து 6 மாதங்களாக அதிகரிக்குமாறு மத்திய வங்கியிடம் திறைசேரி கோரியுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி 160மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இரண்டு கடன்களை இலங்கைக்கு வழங்கியிருந்தது. புனர்வாழ்வு மற்றும் மின்சார வசதிகள் அற்ற பகுதிகளுக்கு மின்சார விநியோகம் செய்தல் ஆகியவற்றுக்காக இந்த கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் 20வீதமானோர் மின்சார வசதியற்று இருப்பதாக அண்மைய மதிப்பீடு தெரிவிக்கின்றது.

கடந்த சில மாதங்களாக பல வர்த்தக ஸ்தாபனங்களில் தொழில் வழங்குநர்களுக்கும், ஊழியர்களுக்கும் இடையில் சீரற்ற நிலை காணப்படுகின்றது. ஊழியர்களின் வேலை நேரக் குறைப்பு, பணிநீக்கம் என்பன இதற்கு பிரதான காரணங்களாக அமைந்திருந்தன. இந்த மூழ்கும் நடவடிக்கையை சமாளிப்பதற்கு புத்தகங்களை இறக்குமதி செய்வதற்கான உத்தரவுகள் ஏப்ரல் மாதத்தில் உருவாக்கப்பட்டன. இவ்வாறான நடவடிக்கைக்கு தொழில் வழங்குநர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இடையிலான பரஸ்பர உடன்படிக்கையின் அடிப்படையில் அரசாங்கத்தின் அனுமதியும் அளிக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களுக்கும், தொழில் வழங்குநர்களுக்கும் இடையிலான இரண்டு வருட சம்பள உடன்படிக்கை ஏப்ரல் மாதத்தில் நிறைவடைந்தது. பெருந்தோட்டத் துறையில் செல்வாக்கு செலுத்த விரும்பியுள்ள மக்கள் விடுதலை முன்னணி கட்சி, தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 500 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என அறிவித்தது.
பங்கு பெறுமதிகள் பொருளாதாரத்தின் முழுவீச்சையும் வெளிப்படுத்துவதாக அமையவில்லை. எவ்வாறாயினும், பங்கு பெறுமதிகளின் அசைவு முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புகளும் சிறந்த சுட்டிகளை காட்டிநின்றன. ஏப்ரல் மாதத்தில் யுத்தமானது முடிவை நெருங்கியுள்ளது என்ற உணர்வு, புதிய வர்த்தக சந்தர்ப்பங்களை உருவாக்கியதுடன் பங்குபெறுமதிகள் 10% வளர்ச்சியடைவதற்கும் துணைபுரிந்தன.

# சுற்றுச் சூழல்

ஏப்ரல் மாதத்தில் சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் இலங்கையிலும் உணரப்பட்டன. அத்துடன் மாதத்தின் முற்பகுதியில் தொடர்ச்சியான புயல் வீசியதனையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. ஏப்ரல் 4ஆம் திகதி சிலாபத்தின் வடமேற்கு பகுதியிலும், ஹொரனவின் தென்மேற்கு பகுதியிலும் "டோனடோ புயல்" தாக்கியதால் 130 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. ஏப்ரல் 6ஆம் திகதி நுவரெலியாவில் வீசிய கடும் புயலில் 35 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்ததுடன், 4 வீடுகள் நிரந்தரமாக சேதமடைந்தன.புத்தளம், கருவலகஸ்வெவ பகுதியில் ஏப்ரல் 8ஆம் திகதி வீசிய புயலில் 50வீடுகள் முற்றாக சேதமடைந்தன. மாதத்தின் முதல் அரைப்பகுதியில் கடும்மழை காரணமாக நாட்டின் சில பகுதிகளில் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டது. மக்கள் இடம்பெயர்ந்துள்ள வன்னியிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மக்கள் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல் மாதத்தில் இரண்டு சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் உணரப்பட்டன. ஏப்ரல் 15ஆம் திகதியன்று முதலாவது நிலநடுக்கம் அம்பாறை, மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை, பதுளை மற்றும் மொனராகலை பகுதியிலும், இரண்டாவது நிலநடுக்கம் ஏப்ரல் 21ஆம் திகதி சீகிரியாவிலும் உணரப்பட்டன. இலங்கைக்கு 500கிலோமீற்றர் தெற்கே புதிய டெக்டோனிக் தகடு உருவாக்கமே இந்த நிலநடுக்கங்களுக்கு காரணம் எனவும், 2004ஆம் ஆண்டு சுனாமி ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்ததது எனவும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். தொடர்ந்தும் இவ்வாறான நிலநடுக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளமையினால், புதிய கட்டங்களை அமைக்கும் போது, இந்த எச்சரிக்கையையும் கருத்திற் கொள்ளுமாறு நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஏப்ரல் மாதத்தில் கொழும்பிலே குப்பைகள் அகற்றப்படுவது மாபெரும் பிரச்சினையாக உருவெடுத்திருந்தது. குப்பைகள் ஒழுங்காக சேகரிக்கப்பட்டமையால் வீதிகளில் மலைபோல் குவிந்து கிடந்தது. புளூமெண்டால் பகுதியில் மேலும் குப்பைகளை கொட்டுவதை தவிர்க்குமாறு உயர்நீதிமன்றம் அளித்த உத்தரவையடுத்தே இந்த பிரச்சினை உருவெடுத்தது. புதிதாக பேலியகொடை பகுதியில் குப்பைகளை கொட்டுவதற்கு கொழும்பு மாநகர சபை திட்டமிட்டிருந்த சந்தர்ப்பத்தில், அதற்கு அயலில் வசிப்பவர்கள் குப்பைகளை கொட்டுவதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ததையடுத்தே இந்த நெருக்கடி நிலை உருவெடுத்தது. இதன் காரணமாக கொழும்பு நகர வீதிகளில் குப்பைகள் நிறைந்ததையடுத்து நுளம்புகள் இலகுவாக பெருகும் வாய்ப்புக்கள் இருப்பதனால் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

நாடளாவிய ரீதியில் புதுவருட காலத்தில் சுமார் 2 மில்லியன் மரங்களை நடும் திட்டம் "இன்று மரங்களை நடுவோம், நாளை கனிகளை பெறுவோம்" என்ற தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கத்தின் கிராம அபிவிருத்தி திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஏப்ரல் 25ஆம் திகதி மேல் மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலுக்கான பிரசாரங்களின் போது பிளாஸ்டிக்கிலான கட்சியின் விளம்பர பதாகைகள், அலங்காரங்கள் என்பன குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்டதோடு சுவர்கள், மரங்கள் மற்றும் பல இடங்களில் சுவரொட்டிகள் ஓட்டுவதும் வெகுவாக குறைந்திருந்தமையை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

இறுதியாக, வடக்கில் தேர்ந்தெடுக்கப்படாத சில இடங்களில் (உதாரணமாக: மெனிக் பார்ம்-வவுனியா) தற்காலிக முகாம்கள் அமைக்கப்படுவதற்காக பெரும் எண்ணிக்கையில் மரங்கள் அழிக்கப்பட்டமை பலரின் அதிருப்திக்கு உள்ளாகியது. இதன் காரணமாக இப்பகுதியில் நிழல் தரும் மரங்கள் இல்லாது போனதுடன், கடும் மழைக் காலங்களில் இலகுவாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதனையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

## சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் -

**யு**த்தம் இறுதிகட்டத்தை அடையும் நிலையில், ஏப்ரல் 17ஆம் திகதி டெய்லி மிரர் பத்திரிகையில் சித்திரவதைக்குள்ளான தீவுக்கான வழிகாட்டியை பிரேரித்துள்ள கலாநிதி. தயான் ஜயதிலக்க (Dr.Dayan Jayatleke) வின் கட்டுரை உண்மையில் தைரியமூட்டுவதாக உள்ளது. **"தந்திரோபாய வெற்றி, சாதுவான சமப்படுத்தல் அல்ல"** என தலைப்பிடப்பட்ட கட்டுரையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுவதன் அவசரமான அவசியத்தை கலாநிதி. தயான் ஜயதிலக்க எழுதியுள்ளார். இதனை தந்திரமான நேர்மையூடாக அவர் தனது கட்டுரையில் விவரிக்கின்றார். "தந்திரோபாயங்களும், தெரிவுகளும் ஒருபக்கம் இருக்க, முழுமையாகவும், அவசரமாகவும் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த இலங்கை ஏன் உறுதியாக இருக்க வேண்டும் என்றால், அதற்கு பல உண்மையான காரணங்கள் உள்ளன. அது அடையாளம், தன்னாட்சி, சமமான இடம் சம்பந்தப்பட்ட விடயம்." எனவும் "சமமான எண்ணிக்கையில் அதிகாரத்தையும், தொழிலையும் அந்த பகுதி மக்களுக்கு பகிர்ந்தளிப்பது என்பது கேள்விக்குரிய விடயமாகும். எந்தவொரு மக்களும் காவலிலும், பொலிஸார் நிறைந்த பகுதியிலும், சிறைக்கூடங்களிலும், அடைக்கப்பட்ட பகுதிகளிலும், வேறு இனத்தைச் சேர்ந்த, வேறு மதத்தைச் சேர்ந்த தமது மொழியை பேசாத ஒருவரினால் ஆளப்படுவதை விரும்பமாட்டார்கள்." கூறும் அவர் "எழுத்தாளர் கூறுவன, அவரது கண்டிப்பான தனிப்பட்ட கருத்துக்கள்." என்ற ஒரு எச்சரிக்கையுடன் நிறைவு செய்கிறார். ஆங்கில ஊடகங்களில் இது புத்துணர்ச்சியூட்டும் தென்றலாக காணப்படுகின்றது.
ஏப்ரல் 16ஆம் திகதி டெய்லி மிரரில், **"இலங்கை முரண்பாட்டை முடிவுக்கு கொண்டு வருதல்"** என்ற தலைப்பின் கீழான கட்டுரையில் சிங்கப்பூரின் அரசியல் வன்முறை மற்றும் பயங்கரவாத ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையத்தின் தலைவர் பேராசிரியர் ரொஹான் குணரத்ன இவ்வாறு தெரிவிக்கின்றார். ஜனநாயகம், பொறுப்பு மாற்றம், அபிவிருத்தி என்பன மோதல் தீர்வின் பலனை வலுப்படுத்தும்.அது ஆரம்பமாக சாதகமான அல்லது பாதகமான முயற்சிகள் சாதாரணமாக முரண்பாட்டின் விளைவுகளை அப்புறப்படுத்தும். கண்டிப்பான தன்மை உருவாக்கப்பட வேண்டும். ஆரோக்கியமான, உறுதியான சிறந்த ஜனநாயக பயிற்சிகள் நல்ல ஆட்சிமுறைக்கான கருவிகளாக இருக்கும். நல்ல ஆட்சிமுறைமை முரண்பாட்டின் தாக்க விளைவுகளை உருமாற்றும்....."

இலங்கையில் தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்பு கொண்டாடப்பட்ட ஏப்ரல் மாதத்தில் ஊடகங்களுக்கான இடம் குறித்து பார்க்கும் போது, இவ்வாறான மாறுபட்ட விடயங்கள் ஆங்கில ஊடகத்திலேயே குறிப்பிடப்பட்டிருந்தன. எந்தவொரு சிங்கள ஊடகத்திலும் குறிப்பிடப்படவில்லை. இதே மாதத்தில், இலங்கையின் ஊடகத்துறையில் வாழும் சரித்திரமாக கூறப்படும் திரு. எட்மன்ட் ரணசிங்க(தினமின மற்றும் அரச கட்டுபாட்டுக்கு வருவதற்கு முன்னரான சிலுமினவின் முன்னாள் ஆசிரியர், திவயின மற்றும் த ஐலன்ட் ஆசிரியர், மற்றும் சிரேஷ்ட , ஆசிரிய பணிப்பாளர் உபாலி நியுஸ் பேப்பர்ஸ் லிமிடட். 6ஆம், 7ஆம் திகதிகளில் **"சக்தியை இழந்த எங்கள் ஊடகம்"** என்ற தலைப்பில் கட்டுரையொன்றை எழுதியிருந்தார். விசனமான தற்சோதனையுடனேயே அவர் தனது கருத்தை ஆரம்பிக்கின்றார். "இது நெருங்கிய தொடர்பில்லாதது. ஆனால் இது நாட்டின் ஊடகத்தின் தன்மையில் ஊமைக்காயம் என்ற அர்த்தத்துடன் தொடர்புபடுகின்றது...." அதன் பின்னர் மேலும் முக்கியமான ஒரு கருத்தையும் தெரிவிக்கின்றார். ".....ஊடகவியாலளருக்கும், அரசியல்வாதிக்கும் இரகசியத் தொடர்பும் தடங்கலற்று இருக்கின்றது. எதுவுமே நடக்கவில்லை. எதுவுமே கற்கப்படவில்லை. எதுவுமே மாற்றமடையவில்லை...." திரு. எட்மன்ட் ரணசிங்க அரிதான இயல்புடையவர். சிரேஷ்ட ஆசிரியராக இருந்த சந்தர்ப்பத்தில் அவரது நிறுவனம் அரசாங்க கட்டுபாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அரசாங்கத்துக்கு சேவை செய்து சிறப்புரிமைகளை பறிமுதல் செய்ய அவர் தீர்மானித்தார். அது இரண்டு காரணங்களுக்காக கவலையான நடவடிக்கையாகும். முதலாவது, இந்த சிந்தனை எங்கள் ஊடகம் சிங்களத்தில் எழுதப்பட வேண்டும் என்ற எண்ணத்தை தோற்றுவித்தது. இரண்டாவது, இலங்கையில் சிங்கள அச்சு ஊடகத்தில் தலைவர்களாக இருக்கும் பலர் இவரை பின்பற்றுகின்றனர்.

மேல் மாகாண சபைத் தேர்தலில் பொது அமைப்புக்கள் கண்காணிப்பாளராக கடமையாற்றின. அவர்கள் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற எல்லா வன்முறைகளையும் சேகரித்த போதிலும், வாக்களிப்பு தினத்தன்று நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல்கள் நடைபெற்றதாக அறிவித்தனர்.

உலகளாவிய ரீதியில் பொருளாதாரம் சரிந்துள்ள நிலையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பிரதான பாத்திரமாக சர்வதேச நாணய நிதியம் செயற்பட்டு வருகின்றது. சிவில் சமூக ஸ்தாபனங்களின் வடிவில் இருக்கும் வளங்களை விரிவாக்க சர்வதேச நாணய நிதியம் திட்டமிட்டுள்ளது. அதன் ஆரம்ப கட்டமாக சிவில் சமூக ஸ்தாபனங்கள் என்பதால் அவர்கள் வரைவிலக்கணப்படுத்துவது:
"சிவில் சமூக ஸ்தாபனங்கள் என்பதனூடாக பரந்த அளவிலான பிரஜைகளின் ஒன்றியங்களாகவும், அனைத்து உறுப்பு நாடுகளிலும் பலன்கள், சேவைகள் அல்லது அரசியல் செல்வாக்கை கொண்ட விசேடமான சமூக குழுக்கள் என்பதனையே சர்வதேச நாணய நிதியம் விளக்கி நிற்கின்றது. வர்த்தக அமைப்புக்கள், நம்பிக்கை சார்ந்த ஒன்றியங்கள், தொழிற்சங்கங்கள், உள்சமூக குழுக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், இரக்க குணமுடைய நிதியங்கள், சிந்தனை வங்கிகள் என்பன சிவில் சமூக ஸ்தாபனங்களில் உள்ளடங்குகின்றன. வழமையாக தவிர்க்கப்படுவன அரசாங்க கிளைகள் மாத்திரமல்ல. (அரசாங்க கிளைகள் மற்றும் சட்டவாக்க சபைகள்). தனியார் வர்த்தகங்கள், அரசியற் கட்சிகள் மற்றும் ஊடகங்களும் தவிர்க்கப்படும்." நம்மைப் போன்ற சமூகத்தில், வாழ்க்கையின் ஒவ்வொரு விடயமும் அரசாங்கத்தின் செல்வாக்கை கொண்டிருக்கும். அதனையே சர்வதேச நாணய நிதியம் திருத்துகின்றது. வழமையாக தவிர்க்கப்படுவன என்பதனூடாக, அசாதாரண விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

## மனிதநேயம் மற்றும் அபிவிருத்திக்கான இடம்

**வ**வுனியாவில் உள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்கள் இராணுவத்தின் முகாமைத்துவத்தில் இருந்து மீள்குடியேற்ற அமைச்சின் முகாமைத்துவத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக ஏப்ரல் மாதத்தின் ஆரம்பத்தில் அரசாங்கம் அறிவித்தது. இடம்பெயர்ந்தவர்களை தேசிய அடையாள அட்டைகளுக்காக பதிவு செய்யும் நடவடிக்கையையும் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. இடம்பெயர்ந்தவர்களுக்கு தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ள நடமாடும் சுதந்திரம், அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் தளர்த்தப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. வயது முதிர்ந்தோருக்கு முகாம்களுக்கு வெளியே உள்ள தமது உறவினர்களுடன் சென்று வதிவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா செயலாளர் நாயகத்தின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் மனித உரிமைகளுக்கான பிரதிநிதி பேராசிரியர் வோல்ட்டர் கெய்லின், இலங்கையில் முரண்பாட்டின் காரணமாக சிக்கியுள்ள உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் உயிர்களை பாதுகாக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். ஏப்ரல் மாதத்தின் முற்பகுதியில் நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த வோல்ட்டர் கெய்லின் முக்கிய அரசாங்க பிரதிநிதிகளை சந்தித்ததுடன், வவுனியாவில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களையும் பார்வையிட்டார். அரசாங்கத்தினால் யுத்த சூனிய வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 14சதுர கிலோமீற்றர் பகுதியில் சிக்கியுள்ள சுமார் 1 இலட்சம் மக்களின் உயிர்கள் குறித்து தாம் ஆழ்ந்த கவனஞ் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் ஏற்கனவே கொல்லப்பட்டோ, காயமடைந்தோ உள்ளனர். தொடர்ச்சியான அறிக்கையின் பிரகாரம் எல்.ரி.ரி.ஈயினர் தற்போது இந்த வலயத்திற்குள் முடக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் தமது உயிர்களை இழக்கக்கூடிய அபாயம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எல்.ரி.ரி.ஈயினரின் கட்டுப்பாட்டில் தற்போது பொதுமக்கள் அனைவரையும் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அவர் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார். அத்துடன், மக்கள் அங்கு இருக்கும் வரை அரசாங்கம் யுத்த சூனிய வலயத்தை மதிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

புதுவருடத்திற்காக ஏப்ரல் 13ஆம் மற்றும் 14 ஆம் திகதிகளில் பொதுமக்கள் மோதல் பிரதேசத்தில் இருந்து வெளியே வருவதற்கு இரண்டு நாட்கள் யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்த நடவடிக்கை இரு தரப்பினராலும் மதிக்கப்பட்டதோடு, ஐக்கிய நாடுகளின்

செயலாளர் நாயகமும் இதனை வரவேற்றிருந்தார். இது தொடர்பில் ஏப்ரல் 12 ஆம் திகதி அவர் வெளியிட்டிருந்த அறிக்கையில், பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

ஏப்ரல் 20 ஆம் திகதி சர்வதேச செஞ்சிலுவை குழு வெளியிட்டிருந்த அறிக்கையில், பெப்ரவரி 10 ஆம் திகதி முதல் சுகவீனமுற்ற, காயமடைந்த நோயாளிகள் சுமார் 10 ஆயிரம் பேர் எல்.ரி.ரி.ஈயினரின் கட்டுப்பாட்டில் இருந்த புதுமாத்தளன் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது. சர்வதேச செஞ்சிலுவை குழுவின் கிறின் ஓசன் மற்றும் சேருவில ஆகிய படகுகள் சுமார் 23 தடவைகள் பயணித்து, ஒவ்வொரு முறையும் 400 பேரை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளான திருகோணமலை மற்றும் புல்மோட்டை பகுதிகளுக்கு அழைத்து வந்துள்ளது. இதன் காரணமாக பல உயிர்கள் காப்பாற்றப்பட்டதோடு, சுகவீனமுற்றவர்களுக்கும், காமயடைந்தவர்களுக்கும் ஆறுதலாக அமைந்தது.

இடம்பெயர்ந்தவர்கள் பாதுகாப்பாக தப்பி வருவதற்கு இலங்கை இராணுவத்தினர் ஏப்ரல் 20 ஆம் திகதி வழியை ஏற்படுத்தினர். ஆயிரக்கணக்கான பொதுமக்கள் எல்.ரி.ரி.ஈயினரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு மத்தியில் தப்பிவந்தனர். இதன் போது எல்.ரி.ரி.ஈயினரால் மேற்கொள்ளப்பட்ட 3 தற்கொலைத் தாக்குதல்களில் 17பேர் கொல்லப்பட்டதுடன், 200 பேர் காயமடைந்தனர்.

வவுனியாவில் இடம்பெயர்ந்தவர்களின் உதவிக்காக அரசாங்கம் மேலதிக வளங்களையும், கருவிகளையும் வழங்கியுள்ளது.
அத்துடன், இடம்பெயர்ந்தவர்கள் சம்பந்தப்பட்ட நிவாரண நடவடிக்கைகளின் நிர்வாகத்துக்காகவும், ஒருங்கிணைக்கவும் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் அதிகாரசபையை அரசாங்கம் நியமித்துள்ளது.
ஐக்கிய நாடுகளின் அவசர நிவாரண சேவைகள் ஒருங்கிணைப்பாளர் ஜோன் ஹோல்ம்ஸ் இரண்டு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு ஏப்ரல் 26ஆம் திகதி இலங்கை வந்தார். அரசாங்கத்தின் பிரதிநிதிகளையும், அதிகாரிகளையும் சந்தித்த அவர், நலன்புரி நிலையங்களுக்கும், ஓமந்தைக்கும் விஜயம் செய்திருந்தார். மோதல் பிரதேசத்தில் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான குழு மதிப்பீடுகளை நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு ஜோன் ஹோல்ம்ஸ் கோரிக்கை விடுத்திருந்தார். இது நடைபெறுவதற்கான நிலைமைகள் கட்சிகளால் உருவாக்கப்படவில்லை.
அத்துடன் கிளிநொச்சி மற்றும் ஓமந்தை பகுதிகளில் சர்வதேச நிறுவனங்கள் அமைக்கப்படுவது குறித்தும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். சுமார் 14 ஐக்கிய நாடுகளின் ஊழியர்களும், அண்ணளவாக 207 அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களும் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள முகாம்களில் இருந்தும் மோதல் வலயத்திலிருந்தும் வெளியேற முடியாதநிலையில் உள்ளதாக, ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான குழுவின் அறிக்கையிலிருந்து தெரிய வருகின்றது.
அவர்களை விடுவிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு ஜோன் ஹோல்ம்ஸ் அரசாங்கத்திடம் கோரியுள்ளார். நிவாரண நடவடிக்கைகளுக்காக 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்படுவதாகவும் ஜோன் ஹோல்ம்ஸ் அறிவித்திருந்தார்.

கடந்த வருடத்தின் ஒக்டோபர் 27 ஆம் திகதி முதல் இவ்வருடம் ஏப்ரல் 27 ஆம் திகதி வரை 157,231 பேர் மோதல் பிரதேசத்திலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வந்துள்ளனர். சுமார் 149,421 பேர் வடக்கில் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதில் 31,040 குடும்பங்களைச் சேர்ந்த 138,023 பேர் வவுனியாவில் 23 நிலையங்களிலும், மன்னாரில் 52 நிலையங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 3,698 குடும்பங்களைச் சேர்ந்த 11,166 பேர் யாழ்ப்பாணத்தில் 12 நிலையங்களிலும், திருகோணமலையில் 5,414 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவை தவிர ஏப்ரல் 27ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 1,810 பேர் காயமடைந்த நிலையில் வெவ்வேறு மாவட்டங்களின் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

புதிதாக வருகை தருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் சில இடம்பெயர்ந்தோர்களுக்கான முகாம்களில் அதிக எண்ணிக்கையிலானோர் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. வவுனியாவில் 5 பேருக்காக அமைக்கப்பட்ட கூடாரங்களில் 18 பேர் வரை தங்குவதாகவும், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நீர் விநியோகிக்கப்படுவதாகவும் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான குழு தெரிவிக்கின்றது.

மோதல் பிரசேத்திலும், முகாம்களிலும் சுகாதார வசதிகள் முக்கியமான விடயமாக விளங்குகின்றது. 3 வலயங்களிலும் தளவைத்தியசாலைகள் நிர்மாணிக்கப்படும் என ஊயு அறிவித்துள்ளது. இதற்காக 2 வைத்தியர்களை 24 மணித்தியாலங்களுக்கு நியமிக்குமாறு உள்ளூர் சுகாதார அதிகார சபையிடம் கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் குழு செட்டிக்குளம் பகுதியில் 4 வைத்திய நிபுணர்கள் உட்பட 30 வைத்திய அதிகாரிகளுடன் தளவைத்தியசாலையை நடத்தி வருகின்றது.

முகாம்களில் நீர் மற்றும் சுகாதார வசதிகள் முக்கியமான விடயமாக மாறியுள்ளதுடன் அவை சர்வதேச தரத்தை பூர்த்திசெய்யவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதிகரித்துச் செல்லும் இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கையின் காரணமாக வவுனியாவில் தற்போது மேலதிகமாக 20 நீர்த்தாங்கிகள் தேவையென உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது 55 நீர்த்தாங்கிகள் பயன்படுத்தப்படுகின்றன. இடம்பெயர்ந்தோரின் அவசர தேவைகளை அடையாளங் காணவும், அது குறித்து அக்கறை செலுத்துவதற்காகவும் மெனிக் பாம் வலயம் 2இல் அரசாங்கம் அலுவலகம் ஒன்றை அமைத்துள்ளது. இந்த அலுவலகத்தில் பொலன்னறுவை, கண்டி அரச அதிகாரி உயரதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
30தொன் எடையுள்ள உணவுகள் நிரப்பிய படகுகளை 3 தடவைகளில் திருகோணமலையிலிருந்து மோதல் வலயத்திற்கு கொண்டு செல்வதற்கு சர்வதேச செஞ்சிலுவை குழு திட்டமிட்டுள்ளது.
அத்துடன், மோதல் வலயத்தில் காயமடைந்துள்ளவர்களை வெளியேற்றவும் சர்வதேச செஞ்சிலுவை குழு திட்டமிட்டுள்ளது.

## வெளிச் செயற்பாட்டாளர்கள்

இம்மாதத்தில் குறிப்பிடத்தக்களவு முக்கியமான வெளிச் செயற்பாட்டாளர்கள் காணப்படுகின்றனர். இலங்கை பல்வேறு உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடல்களை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பேரவை உறுப்பினருடன் நடத்தியிருந்தது. சில விமானப் பயணங்களும் அமைச்சர்கள் என்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்டன. சர்வதேச தொலைபேசி உரையாடல்களும் இடம்பெற்றன. இவை அனைத்துமே ஒரு கருப்பொருளையே கொண்டிருந்தன. யுத்த சூனிய வலயத்தில் சிக்கியுள்ள பொதுமக்களையே அவை இலக்காகக் கொண்டிருந்தன. போர்நிறுத்தம் தொடர்பாகவும் பேசப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி சர்வதேச கருத்துக்களை பிரதானமாக கொண்டுள்ளது. மற்றுமொரு குழுவும் அவசர உதவிகள், மதிப்பீட்டு தேவைகள், பறக்கும் கூடாரங்கள், பறக்கும் சேலைகள், சாரங்கள், சட்டி, பானைகள் என 40 ஆயிரம் பொதிகளில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு உதவிகளை அனுப்பி வைத்தது.எந்தவொரு ஊடகவியலாளரும் நாட்டைவிட்டு வெளியேறவில்லை. அல்ஜசீரா ஊடக நிறுவனம் மிகப்பெரிய அளவில் செய்திகளை வெளியிட்டது. பெரும் அளவிலான பொய்யற்ற செய்திகளையும் வெளியிட்டது. யுத்த சூனிய வலயத்தில் இடம்பெற்றதாக காட்டப்பட்ட காட்சிகளினால் தாக்கத்துக்குள்ளான மக்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றில் இலண்டனில் அமைந்துள்ள இந்திய நிலையத்தின் முன் காணப்பட்ட நேரு சிலையின் தலை உடைக்கப்பட்டது. பல சம்பவ நிகழ்வுகளுடனான மாதமாக இந்த மாதம் காணப்பட்டது.

# மாவட்ட ரீதியிலான பகுப்பாய்வுகள் மார்ச் 28 – ஏப்ரல் 28 2009

## அம்பாறை

### களநிலைமைகள்

கொடூரமான வகையில் அம்பாறையில் எல்லைக் கிராமவாசிகள் கொலை செய்யப்பட்டமையை அடுத்து அண்மைக்காலமாக மாவட்டம் அனுபவித்து வந்த அமைதியான நிலை பாதிக்கப்பட்டுள்ளது. சமூகங்களுக்கு மத்தியிலான உறவிலும் பதட்ட நிலை அதிகரித்துள்ளது. எல்லைக் கிராமங்களில் அவ்வப்போது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தரும் சம்பவங்களும் இடம்பெற்றன. இந்த மாதத்தில் 13 எல்.ரி.ரி.ஈயினர் பாதுகாப்பு படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தமை கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

கருணாவுக்கும், கட்சிக்கும் இடையிலான பிளவும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. திரு.பாரதி, கிழக்கு மாகாணத்திற்கான ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டமையும் தாக்கத்தை

தோற்றுவித்துள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பில திரு. பாரதியின் கண்காணிப்பானது, அந்நிறுவனங்களின் ஆர்வத்துக்கு தடையானதாக அமைந்திருந்தது. சில அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது திட்டங்களை குறைத்துக் கொண்டுள்ளதுடன், தமது ஊழியர்களின் எண்ணிக்கையையும் குறைத்துள்ளது. இது மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. விசேடமாக கரையோரப்பகுதிகளில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளின் தேவை அதிகமாக காணப்படுகின்றது.

**செயற்பாட்டாளர்கள்**
அரசாங்க அதிகார சபைகள், பாதுகாப்பு படையினர் மற்றும் எல்.ரி.ரி.ஈ ஆகியன பிரதான செயற்பாட்டாளர்களாக கருதமுடியும்.

**மாற்றங்கள்**
அம்பாறையின் எல்லைக் கிராமங்களில் விவசாயிகள் கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவம் அண்மைக்காலமாக மாவட்டத்தில் நிலவி வந்த ஸ்திரமான நிலையினால் காணப்பட்ட மகிழ்ச்சி நிலையை குறைத்து மக்களின் மனவுறுதி மற்றும் நம்பிக்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பொதுமக்கள் மத்தியில் அச்சம் உருவாகியுள்ளதுடன், தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக வீடுகளை விட்டு வெளியே வருவதையும் தவிர்த்து வருகின்றனர். இது சமூகங்களுக்கு இடையில் நிலவிய சுமூகமான நிலையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சமூகங்களுக்கு மத்தியில் அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளதன் காரணமாக இணைந்து பணியாற்றுவதில் தடையேற்பட்டுள்ளது.

**தந்திரோபாயங்களும், தெரிவுகளும்**
பொதுமக்களின் பாதுகாப்புக்கே அதிகாரிகள் முன்னுரிமை கொடுக்க வேண்டும். பாதுகாப்பின்மை மக்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்குவதுடன் முன்செல்வதற்கான இயக்க அளவில் தடங்கலை ஏற்படுத்தும். அத்துடன், மாவட்டத்தின் அபிவிருத்திக்கு தீங்கினை விளைவிக்கும்.

எல்.ரி.ரி.ஈயினரின் தாக்குதல் எச்சரிக்கை இருப்பதன் காரணமாக எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பின் மீது விசேட கவனஞ் செலுத்தப்பட வேண்டும்.

முறையான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு, அதனை பின்பற்றி மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் அரச சார்பற்ற நிறுவனங்களின் மீது தன்னிச்சையான, ஒவ்வாத விதிமுறைகள் திணிக்கப்படுவதை தவிர்க்க முடியும். இந்த கட்டமைப்பு பரஸ்பர கூட்டுறவை ஏற்படுத்துவதுடன், மாவட்டத்தின் தேவையான மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளை வழங்குவதனூடாக பயனடையும்.

## மட்டக்களப்பு

**களநிலமைகள்**
ஏனைய மாவட்டங்களைப் போலல்லாது அமைதியான சூழ்நிலையொன்று மட்டக்களப்பில் காணப்படுகின்றது. மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இருண்ட பின்னரும் வெளியில் செல்லக் கூடிய அளவு போதிய உறுதி பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. கொலைகள், கடத்தல்கள் மற்றும் துணை இராணுவக் குழுக்களின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளன. வெவ்வேறு அரசியல் குழுக்களுக்கு இடையிலான முரண்பாடு காணப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையிலும் சமூக உறவு மேம்பட்டுள்ளது. அத்துடன் அபிவிருத்தி செயற்பாடுகளும், இனநல்லுறவை கட்டியெழுப்பலும் தொடர்கின்றன.

கருணா SLFPயின் உப தலைவராக நியமிக்கப்பட்டமை போதிய அளவு விவாதங்களை எழுப்பியிருந்தது. இதன் பிரதிபலனாக கிழக்கு மாகாணத்தில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. TMVP அலுவலகங்கள் சில SLFPஅலுவலகங்களாக மாற்றமடைந்துள்ளன. இந்த நடவடிக்கை TMVP ஆதரவாளர்களையும் சம்பந்தப்படுத்தியுள்ளது. எனினும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த நடவடிக்கையானது கட்சிக்குள் எவ்வித மாற்றத்தை கொண்டு வரும் என்பதில் அவர்களும் உறுதியாக இல்லை.

இதேவேளை, வர்ஷா ஜூட் ரெஜி கடத்தப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்ட காயம் ஆறுவதற்கு முன்னர் மட்டக்களப்பில் சிறுமி ஒருவர் கடத்தப்பட்ட விடயம் மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

13ஆவது திருத்தம் மீதான விவாதம் ஒத்திவைக்கப்பட்டமையும் மாவட்டத்தின் ஆர்வத்தை சந்திக்கவில்லை.

**செயற்பாட்டாளர்கள்**
பாராளுமன்ற உறுப்பினர் கருணா, அரசாங்க அதிகார சபைகள், பாதுகாப்பு படையினர், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியன பிரதான செயற்பாட்டாளர்களாக கருத முடியும்.

**மாற்றங்கள்**
SLFP யின் உப தலைமைப் பொறுப்பேற்ற கருணாவின் முடிவு மாவட்டத்திலும், விசேடமாக TMVP யிலும் போதியளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த மாற்றம் எவ்வாறு கட்சிக்கு பயனளிக்கும் என்பது குறித்து கட்சியின் ஆதரவாளர்கள் விவாதித்து வருகின்றனர்.

13ஆவது திருத்தத்தின் மீதான விவாதம் ஒத்திவைக்கப்பட்டமையும் மாவட்டத்தில் பெரும் விவாத சூழல் ஒன்றை உருவாக்கியுள்ளது.

வன்னியில் யுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், சுமார் 3 தசாப்தங்களுக்கான யுத்தத்தின் முடிவுக்காக மக்கள் ஆவலோடு காத்திருக்கின்றனர். அம்பாறை எல்லைக் கிராமத்தில் அண்மையில் இடம்பெற்ற கொலைகள் மட்டக்களப்பில் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது.

**தந்திரோபாயங்களும், தெரிவுகளும்**
தொடர்ச்சியான பாதுகாப்பு கண்காணிப்பின் தேவை நிராகரிக்க முடியாதது என்பது அண்மையில் அம்பாறையில் இடம்பெற்ற கொலைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இதேவேளை, மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளில் சமூக அமைப்புக்களும், உள்ளூர் அதிகார சபைகளும் இணைந்து செயற்பட்டு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

## கொழும்பு

**களநிலமைகள்**
அறிக்கையிடும் காலப்பகுதியில் கொழும்பில் சூழ்நிலை ஸ்திரமானதாகவே இருக்கின்றது. அண்மையில் நடந்து முடிந்த தேர்தல்கள் தொடர்பிலேயே மாவட்டத்தின் பார்வை அமைந்துள்ளது. தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான பெவ்ரல், அதிக எண்ணிக்கையிலான தேர்தல் வன்முறைகள், துப்பாக்கிப் பிரயோகம், இரண்டு கொலைகள் உட்பட பல சம்பவங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கின்றது. அத்துடன் சுமார் 1.4 மில்லியன் வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. சேகரித்த குப்பைகளை கொட்டுவது மாவட்டத்தின் பிரதான பிரச்சினையாக காணப்பட்டது. இதன் காரணமாக சேகரிக்கப்படாத குப்பைகள் வீதியோரமாக நிறைந்து ஆரோக்கியமற்ற சூழலை உருவாக்கியது. கொழும்பு மாவட்டத்தின் குப்பைகளை கொட்டுவதற்கு நிரந்தரமான இடமொன்று இன்மையினால் தற்காலிக இடங்களிலேயே குப்பைகள் கொட்டப்பட்டு வந்தன. குப்பைகள் நிறைந்ததன் காரணமாக அந்தப் பகுதிகளில் மேலதிகமாக குப்பைகளை கொட்ட முடியாத சூழ்நிலை உருவெடுத்தது.

அவ்வப்போது சோதனை நடவடிக்கைகளும் கொழும்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டன. அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு காரணமாக தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்பின் போது கொள்வனவில் ஈடுபட்டோரின் எண்ணிக்கையும் குறைந்து காணப்பட்டது. தினமும் தொழிலுக்காக வெளியிடங்களில் இருந்து வருகை தரும் பிரயாணிகள் CTB யினரின் வேலைநிறுத்தம் காரணமாக புதுவருட பருவத்தின் போது பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோய் அபாயம் திடீரென அதிகரித்துள்ளது.

**செயற்பாட்டாளர்கள்**
தேர்தலில் போட்டியிட்ட அரசாங்கம் மற்றும் அரசியல் கட்சிகள், பாதுகாப்பு படையினர் ஆகியன பிரதான செயற்பாட்டாளர்களாக கருதமுடியும்.

**மாற்றங்கள்**
அண்மையில் நிறைவடைந்த தேர்தலே மாவட்டத்தின் மாறிவரும் நிலமைகளில் பிரதான இடம்பிடித்துள்ளது. வாக்குகளை சேகரிப்பதற்காக வேட்பாளர்கள் நகரம் முழுவதையும் தமது தேர்தல் விளம்பரங்களினால் நிறைத்து வைத்திருந்தனர். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் தொடர்பில் கலந்துரையாட வெளிநாட்டு இராஜதந்திரிகள் விஜயம் செய்திருந்தமையும் போதிய அளவில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. அதேவேளை, சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய இயல்பில் சர்வதேச தலையீட்டை கண்டித்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். எவ்வாறாயினும், யுத்த சூனிய பிரதேசத்தில் சிக்கியுள்ள பொதுமக்கள் மற்றும் இடம்பெயர்ந்துள்ள மக்களின் நலன் தொடர்பிலேயே தமது விஜயங்கள் அமைந்திருந்ததாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் தெளிவான அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். பொருளாதார ரீதியாக உலக பொருளாதார நெருக்கடி நாட்டின் பொருளாதார நிலையில் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பல புடவைத் தொழிற்சாலைகள், சிறிய

அளவிலான தொழிற்சாலைகளும் மூடப்பட்டதையடுத்து வேலைவாய்ப்பின்மையும் அதிகரித்துள்ளது.

**தந்திரோபாயங்களும், தெரிவுகளும்**
டெங்கு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பில் மேலும் அதிக அக்கறையுடன் செயற்படுவதற்கு அதிகார சபையினர் புதிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி பொதுமக்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.
சுகாதார அமைச்சும் தனிப்பட்ட ரீதியில் போதிய அளவு நிதியொதுக்குவதுடன் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

## யாழ்ப்பாணம்

**களநிலைமைகள்**
யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு நிலைமை ஓரளவு ஸ்திர நிலையை அடைந்துள்ள போதிலும், முல்லைத்தீவில் முன்னெடுக்கப்படும் யுத்த நடவடிக்கை காரணமாக உடனடி பாதுகாப்பு வளையங்களும், திடீர் தேடுதல் நடவடிக்கைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. ஏனைய மாவட்டங்களைப் போன்று துணை இராணுவக் குழுக்களின் நடவடிக்கைகள், கொலைகள், கடத்தல்கள் என தொடர்கின்றன. அத்தியாவசியப் பொருட்களின் போக்குவரத்து மற்றும் கொழும்பில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் போக்குவரத்துக்காக ஏ9 வீதி திறக்கப்பட்டுள்ள நிலையில் யாழ் மாவட்டத்தில் உணவு மற்றும் விவசாயப் பொருட்களின் விலை குறைந்துள்ளது. அத்துடன்,யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுவதனால் வர்த்தக நடவடிக்கைகளும், சந்தை வசதிகளும் மேம்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தில் பெரும்பாலானோரின் உறவினர்கள் கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும் வசிப்பதனால், அப்பிரதேசங்களில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் யாழ் மாவட்ட மக்கள் அக்கறையுடன் உள்ளனர்.

இதேவேளை, அடுத்த இரண்டு மாதங்களில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பானது, கலந்த பிரதிபலிப்பை உருவாக்கியுள்ளது. அரசாங்கம்
விரைவாக இந்த இலக்கை அடையும் என்பதில் நம்பிக்கையில்லாத ஒரு தொகுதி மக்களும் உள்ளனர். அத்துடன், தேர்தல் ஒன்று நடைபெறும் பட்சத்தில் வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்களிற்கு பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தேவையும் அரசாங்கத்திடம் உள்ளது.

**செயற்பாட்டாளர்கள்**
அரசாங்கம், பாதுகாப்பு படையினர், அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தகர்கள் ஆகியன பிரதான செயற்பாட்டாளர்களாக கருத முடியும்.

**மாற்றங்கள்**
சுமார் மூன்று தசாப்தங்களாக இடம்பெற்று வரும் யுத்தத்தின் முடிவை மக்கள் பொறுமையின்றி எதிர்பார்த்திருக்கின்றனர். நீண்டகாலமாக மறந்திருந்த சுதந்திரம் நாட்டின் வடக்கில் விரைவாக மலரும் என்ற எதிர்பார்ப்பும் நிறைந்துள்ளது.

வர்த்தக நடவடிக்கைகளுக்காக ஏ9 வீதி திறக்கப்பட்டமை, வவுனியாவிலிருந்து ரயில் பாதை புனரமைக்கப்படுகின்றமை என்பன மூன்று தசாப்தங்களாக காத்திருந்த உயர்-தரமான வாழ்க்கை முறையை அடைய முடியும் என்ற எதிர்பார்ப்பை மக்கள் மத்தியில் அதிகரிக்கச் செய்துள்ளன.

**தந்திரோபாயங்களும், தெரிவுகளும்**
வடக்கை மீளக் கட்டியெழுப்பும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள "வடக்கின் வசந்தம்" நிகழ்ச்சித் திட்டம் விரைவில் நல்ல பலன்களை வழங்கும். அத்துடன், வருமானம் ஈட்டும் முறைகளை அறிமுகப்படுத்தல், சமாதானத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் ஊடாக வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்தோருக்கும் சுகாதார வசதிகள், போசாக்கு உணவுகள் மற்றும் அடிப்படை வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

## மன்னார்

**களநிலைமைகள்**
வன்னியிலிருந்து வந்த நோயாளிகளில் சுமார் ஆயிரத்து 600 நோயாளிகள் வவுனியா, திருகோணமலை மற்றும் புல்மோட்டையிலிருந்து மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அரச சார்பற்ற நிறுவனங்கள், மத ஸ்தாபனங்கள், பொது ஸ்தாபனங்கள் என்பன வைத்தியசாலை ஊழியர்களின் வேலைப் பளுவை குறைத்து நிவாரண பணிகளில் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றமையையும் காணக்கிடைக்கின்றது. உணவு தயாரித்தல், சலவை, பராமரிப்பு போன்ற விடயங்களில் இந்த நிறுவனங்கள் தங்கள் பங்களிப்பை செய்து வருகின்றன.

2009 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டை முழுவதுமாக செலவு செய்து விட்டதாக DPDHS அறிக்கை வெளியிட்டுள்ளது. அத்துடன், வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய நோயாளிகள் புனர்வாழ்வுக்காக முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளது.

இடம்பெயர்ந்த ஐயாயிரம் குடும்பங்களை மன்னாரில் குடியமர்த்தும் திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டு பாடசாலைகள் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. அத்துடன், புற்கள் வளர்ந்து வாழ்வதற்கு உகந்ததல்லாததாக காணப்படும் காடுகள் அழிக்கப்பட்டு
மேலதிகமாக இடம்பெயர்ந்தோரை குடியமர்த்துவதற்கான திட்டமும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொதுமக்களின் போக்குவரத்து மதவாச்சி சோதனைச் சாவடியில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையிலான பொது மக்களின் பயணங்கள் மதவாச்சி சோதனைச் சாவடியில் நிராகரிக்கப்பட்டு, பொதுமக்கள் திருப்பியனுப்பப்படுகின்றனர். சோதனைச் சாவடியில் பாரபட்சம் நிகழ்வதாகவும், தமிழர்களே பெரும் எண்ணிக்கையில் திருப்பியனுப்பப்படுவதாகவும், சிங்களவர்களும், முஸ்லீம்களும் பயணிக்க அனுமதிக்கப்படுவதாகவும் சில பொதுமக்கள் தமது அதிருப்தியை வெளியிடுகின்றனர். இதேவேளை, இலங்கை இராணுவத்தினர் அனுமதி வழங்க மறுத்தமையினால் மடு திருத்தல உற்சவத்தில் கலந்து கொள்ள முடியாது போனமைக்காக பெரும்பாலான கத்தோலிக்கர்களும் தமது ஏமாற்றத்தை வெளியிட்டுள்ளனர். அத்துடன்,
19 இடம்பெயர்ந்தோர் இந்தியாவில் புகலிடம் கோரியுள்ளனர்.

துணை இராணுவக் குழுக்களின் நடவடிக்கை தொடர்வதோடு, இந்த மாதத்தில் 5 ஆட்கடத்தல்களும், ஒரு கொலையும் பதிவாகியுள்ளது. முகாம்களில் இருந்து வெளியேறியுள்ள சுமார் 100 முதியவர்களை, கத்தோலிக்க தேவாலயத்தின் மேற்பார்வையில் இயங்கி வரும் முதியோர் இல்லத்தில் வைத்து பராமரிப்பதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**செயற்பாட்டாளர்கள்**
புனர்வாழ்வு அமைச்சு, அரசாங்க அதிகார சபைகள், பாதுகாப்பு படையினர், மனிதாபிமான மற்றும் நிவாரண ஸ்தாபனங்கள், கத்தோலிக்க தேவாலயம், இடம்பெயர்ந்தோர் என்பன பிரதான செயற்பாட்டாளர்களாக கருத முடியும்.

**மாற்றங்கள்**
கத்தோலிக்க தேவாலயத்தின் கோரிக்கையின் பயனாக பெரும் எண்ணிக்கையிலான தொண்டர் ஊழியர்கள் மன்னார் வைத்தியசாலை ஊழியர்களின் வேலைப்பளுவை குறைக்கும் வகையில் உணவு மற்றும் உடைகளை சலவை செய்தல் ஆகிய வசதிகளை வழங்குவதில் உதவி செய்து வருகின்றனர்.

தமிழ் மக்களுக்கு பயணிப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டமை, விசேடமாக முக்கிய விடயங்களில் கலந்து கொள்ள முடியாது போனமை என்பன மக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளன. போக்குவரத்தின் அவசியத்துக்கான ஆதாரம் சமர்ப்பிக்கப்பட்டால் அனுமதி வழங்கப்படும் எனும் மன்னார் அரச அதிகாரியின் ஆலோசனைகள் இந்த கொந்தளிப்பை ஓரளவு குறைத்துள்ளன.

துணை இராணுவக் குழுக்களின் நடவடிக்கைகளும் பெரும் பதட்டநிலையை மன்னார் மாவட்டத்தில் ஏற்படுத்தியுள்ளன. பெரும்பாலான மக்கள் அவசர தேவைகளை தவிர்த்து வீடுகளுக்குள்ளேயே அடைந்து இருக்கும் நிலையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

**தந்திரோபாயங்களும் தெரிவுகளும்**
மதவாச்சி சோதனைச் சாவடியை கடப்பதற்கு அனுமதியைப் பெறுவதற்கான தெளிவான குறிப்புக்கள் அடங்கிய வழிகாட்டியை அரசாங்கம் உருவாக்கவேண்டும். இவ்வாறான வழிகாட்டிகள் இல்லாதபட்சத்தில்தான் தமிழ் மக்கள், தமது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக உணர்கின்றனர்.

துணை இராணுவக் குழுக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி மாவட்டத்தில் சட்டஒழுங்கை பேணுவதற்கு பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டும்.

மேலதிக அரச சார்பற்ற நிறுவனங்களை மாவட்டத்தில் செயற்பட வைப்பதன் ஊடாக இடம்பெயர்ந்தோருக்கு சிறந்த சேவைகளை வழங்குவதுடன், அரசாங்கத்தின் பொறுப்பையும் குறைக்க முடியும். உதாரணமாக, உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் அரிசி, மா, போன்ற உணவு வகைகளை வழங்கும் போது, மரக்கறி, பால்மா, உடை, பெண்களுக்கு தேவையான பொருட்கள் என்பவற்றை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கலாம்.
வேலைவாய்ப்பு வழங்கப்படுவதும் முக்கியமாக கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். விரைவாக தற்காலிக பதிவுகள் வழங்கப்படும் பட்சத்தில் பயிரிடுதல், மீன்பிடித்தல் போன்ற தொழில்களில் அவர்கள் ஈடுபட முடியும். இதன் காரணமாக அரசாங்கத்தின் பொறுப்புக்கள் குறைக்கப்படுவதுடன், வேலையின்மை காரணமாக இளைஞர் மத்தியில் ஏற்பட்டிருக்கக் கூடிய பதட்ட நிலையையும் தணிக்க முடியும்.

# திருகோணமலை

**களநிலமைகள்**

கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது திருகோணமலையின் பாதுகாப்பு நிலமை ஓரளவு ஸ்திரமான நிலையில் காணப்படுகின்றது. வன்னியிருந்து வருகை தரும் இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை காரணமாக திருகோணமலை நகரத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வெளியிலிருந்து வரும் வாகனங்கள், பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக போக்குவரத்து நெருக்கடியும் அதிகரிக்கின்றது. அனைத்து பிரயாணிகளும் திருகோணமலை – கொழும்பு வீதியில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் தமது அடையாள அட்டை இலக்கத்துடன், தம்மை பதிவு செய்தல் வேண்டும். எனினும், துணை இராணுவக்குழுக்களின் நடவடிக்கைகள் காரணமாக சிறிதளவு பதட்ட நிலையும் காணப்படுகின்றது. இதன் காரணமாக அண்மித்த பொலிஸ் நிலையத்தின் கையொப்பமிட்ட குடும்ப அட்டையில் இல்லாத வெளிநபர்கள் எவரையும் வீட்டில் தங்க வைக்க வேண்டாம் என திருகோணமலையில் உள்ள அனைவருக்கும் பொலிஸார் கண்டிப்பான ஆலோசனை வழங்கியுள்ளனர். திருகோணமலைக்கு வெளியே பயணிக்கும் நபர்களும் இந்த குடும்ப அட்டையை எப்போதும் வைத்திருக்க வேண்டும். குடும்ப அட்டை இல்லாதவர்கள் சோதனைச் சாவடிகளில் சிக்கல் நிலையை எதிர்நோக்க நேரிடும். இதேவேளை, திருகோணமலையிருந்து மட்டக்களப்புக்கான நேரடி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான ரயில் பெட்டிகளை இந்திய அரசாங்கம், கிழக்கு மாகாண சபைக்கு அன்பளிப்பு செய்திருந்தது.

முல்லைத்தீவில் காயமடைந்தவர்கள் சிலருக்கு புல்மோட்டை வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டது.
அத்துடன், இடம்பெயர்ந்து வருபவர்களுக்கான நிவாரண சேவைகளை வழங்குவதற்கும், தற்காலிக குடியேற்றத்தை அமைக்கவும் அரசாங்கம் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

ஆறு வயதான வர்ஷா ஜூட் ரெஜி என்ற சிறுமியின் கொலை மாவட்டத்தில் தொடர்ந்தும் ஒரு அதிர்ச்சி நிலையை உருவாக்கி வைத்துள்ளது. இந்த கொடூரமான செயல் மக்களின் கோபத்தையும் அதிகரிக்கச் செய்துள்ளது. இந்த செயலானது துணை இராணுவக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு உதாரணமாக இருப்பதுடன், அவற்றை கட்டுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தி நிற்கின்றன. இந்த மாதத்தில் ஐந்து பேர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், இதுவரை துப்பாக்கிதாரிகள் அடையாளங் காணப்படவில்லை.

**செயற்பாட்டாளர்கள்**

அரசாங்க அதிகாரசபைகள், இராணுவத்தினர், துணை இராணுவக் குழுக்கள், இடம்பெயர்ந்தோர் ஆகியோர் பிரதான செயற்பாட்டாளர்களாக விளங்குகின்றனர்.

**மாற்றங்கள்**

துணை இராணுவக் குழுக்கள் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளினால் வர்த்தக சமூகத்தினர் பதட்டத்தின் மத்தியிலேயே வாழ்க்கையை கொண்டு செல்கின்றனர். இதன் காரணமாக சிறிய அளவிலான முதலீடுகளே மேற்கொள்ளப்படுவதுடன், மாவட்டத்தின் வர்த்தக அபிவிருத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வேலையின்மை அதிகரிப்பிற்கும் இது வழிவகுத்துள்ளது. மாவட்டத்தில் இயங்கி வரும் வங்கிகளின் நடவடிக்கைகளும் வர்த்தகத்தில் வீழ்ச்சியினையே சுட்டிநிற்கின்றன.

**தந்திரோபாயங்களும் தெரிவுகளும்**

துணை இராணுவக் குழுக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவதனை அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும்.அத்துடன், கைதுசெய்யப்பட்டவர்கள் எவராக இருப்பினும் அவர்கள் தொடர்பில் கணடிப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

புதிதாக அதிகரித்துள்ள இடம்பெயர்ந்தோரின் தேவைகள் மதிப்பிடப்படுவதுடன், அவர்களுக்கான அடிப்படை தேவைகள் செய்து கொடுக்கப்பட்டு மனிதாபிமான நெருக்கடிகள் தடுக்கப்பட வேண்டும்.

# வவுனியா

**களநிலமைகள்**

யுத்த சூனிய வலயத்திற்குள் சிக்குண்டுள்ள பொதுமக்களை மீட்கும் இராணுவ நடவடிக்கையின் தொடர்ச்சியாக, ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்துள்ளனர். உள்நாட்டில் இடம்பெயர்ந்த இவர்களை வவுனியாவிலும், மன்னாரிலும் தற்காலிக கூடாரங்களில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாரிய அளவிலான இந்த இடப்பெயர்வின் காரணமாக, இடம்பெயர்ந்தவர்களுக்கான சேவைகளையும், அடிப்படை தேவைகளையும் வழங்குவதில் அரசாங்கம் பெரும் சுமையை எதிர்நோக்கியுள்ளது. இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பான்மையானோர் அண்மைக்காலங்காக எதிர்நோக்கிய கொடுமைகள் காரணமாக மன அழுத்தம் மற்றும் கவலையில் உழன்றுள்ளனர்.சில சந்தர்ப்பங்களில் இவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியதாகவிருக்கின்றது. மீட்பு நடவடிக்கையின் பின்னர் அவர்களுக்கான உணவு மற்றும் தங்குமிட வசதிகள் தொடர்பில் போதிய கவனஞ் செலுத்தப்படவில்லை என்றே தெரியவருகின்றது.

இதேவேளை, மனிதாபிமான மற்றும் நிவாரண ஸ்தபானங்கள் தற்போது உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான புகலிடங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. சுமார் 13 ஆயிரம் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு தற்காலிக கல்வி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. நீர், தொலைத்தொடர்பு, வங்கி, கூட்டுறவு கடைகள், தபால் நிலையங்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானங்கள், மனஅதிர்ச்சியடைந்துள்ளவர்களுக்கான உளவள ஆலோசனை சேவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தற்காலிக முகாம்களின் நெருக்கமான சூழ்நிலையிலிருந்து சிறிது நேரமாவது வெளியே செல்வதற்கு தற்காலிக அடையாள அட்டை வழங்கப்படவேண்டும் என இடம்பெயர்ந்தவர்களால் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைக்கின்றது. அத்துடன், அவர்களது உறவினர்கள், அவர்களை சந்தித்து உதவிகளை வழங்குவதற்கான அனுமதியும் வழங்கப்பட வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர். தேவைப்படும் பட்சத்தில் முகாம்களுக்கு வெளியே சிறந்த மருத்துவ வசதிகளை பெற்றுக் கொள்ளவும் அனுமதி கோரப்பட்டுள்ளது.

பிரபலமான வைத்தியர் ஒருவர் கொல்லப்பட்டமை வைத்தியசாலைகளில் வேலைநிறுத்தப் போராட்டம் மற்றும் நகரத்தில் தற்காலிக கடையடைப்பு போன்ற எதிர்ப்பு நடவடிக்கைக்கும் காரணமாகவிருந்தது.

**செயற்பாட்டாளர்கள்**

புனர்வாழ்வு அமைச்சு, இராணுவத்தினர், மனிதாபிமான மற்றும் நிவாரண ஸ்தபானங்கள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தற்போதைய சூழ்நிலையின் பிரதான செயற்பாட்டாளராக காணப்படுகின்றனர்.

**மாற்றங்கள்**

இடம்பெயர்ந்தோர் பெரும் எண்ணிக்கையில் வருகை தருவதால், ஏற்கனவே நெருக்கமாகக் காணப்படும் முகாம்களில் பதட்டம் அதிகரித்துள்ளது. இளைஞர்கள் நெருக்கமான முகாம்களுக்குள் வேலைவாய்ப்பு இன்மை மற்றும் நிவாரணம் இன்மையால் வெறுப்பு ஆகியன காரணமாக வாடுகின்றனர். இது முகாம்களில் அதிருப்தி நிலையை அதிகரித்துள்ளது. இந்த அதிருப்தி நிலை முகாமைத்துவம் செய்யப்பட்டு, இடம்பெயர்ந்தோரின் வாழ்க்கை நிலை மாற்றியமைக்கப்படாவிட்டால் முகாம்களுக்குள் பதட்டநிலை உருவெடுக்கும்.

உடனடி நடவடிக்கையாக சில முதியவர்களை முகாம்களுக்கு வெளியே செல்வதற்கு அதிகாரிகள் அனுமதியளித்துள்ளனர். அத்துடன், நிவாரண ஸ்தாபனங்கள், சில அடிப்படை வசதிகளான தொலைத்தொடர்பு, தபால் சேவைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. சில இளைஞர்கள் முகாம் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த

உடனடி நடவடிக்கை சட்டஒழுங்கை பின்பற்றுவதற்கு உதவி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**தந்திரோபயங்களும், தெரிவுகளும்**

புதிதாக விடுவிக்கப்பட்ட மன்னார் மேற்கு, வவுனியா வடக்கு போன்ற பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு அரசாங்கம் திட்டங்களை வகுக்கவேண்டும். அப்போதுதான், குறித்த பகுதிகளில் இடம்பெயர்ந்தோரை விரைவாக மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்க முடியும்.

விசேடமாக தேசிய பரீட்சைகளில் தோற்றும் மாணவர்கள் மற்றும் வேலையை எதிர்பார்த்திருக்கும் இளைஞர்களுக்கு தற்காலிக பதிவு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவேண்டும்.

சூழ்நிலையின் துரித மதிப்பிடல் (RCA) உள்ளூர் சூழ்நிலைகளின் மாற்றங்களை நன்கு புரிந்து கொள்வதன் அடிப்படையில் பல்வேறுபட்ட மனிதநேய மற்றும் அபிவிருத்தித் தேவைகள் குறித்து கவனம் செலுத்தும் அதிக பயனுறுதி கொண்ட இடையீடுகளைத் திட்டமிட்டு, அமுல்படுத்துவதற்கான பயனுள்ள தகவல்களை மனிதநேய மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனங்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது.

அதே வேளை, சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் இடையீடுகள் மாவட்டங்களின் சமாதானம் மற்றும் மோதல்நிலை மாற்றங்களுக்கு கூருணர்வுத்தன்மை கொண்டவை என்பதையும் முகவர்கள் மோதல்களை சிறிதளவேனும் உருவாக்கவோ அல்லது மோசமாக்குவதையோ தவிர்த்து மோதல் தணிப்பு/மோதல் உருமாற்றம் அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்புதலில் கூடுதல் ஈடுபாட்டைக் காண்பிப்பதற்கான சாத்தியங்களை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

சூழ்நிலைகளின் அபாயவாய்ப்புக்களை மதிப்பிடல் முகவர்களின் செயற்பாடுகளை சற்று இடைநிறுத்தி ஊழியர்கள் மற்றும் திட்டம் அமுல்படுத்தும் இடங்களிலுள்ள மக்களின் பாதுகாப்பை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

வெளியேயுள்ள மட்டத்தில் (பொது மக்கள், சர்வதேச சமுகம்) ஆலோசனைத் தேவைகளுக்காக இலங்கையின் மாவட்டங்களின் நிலைமைகள் பற்றிய விரிவானதும், நடுநிலையானதுமான தகவல்களை சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் வழங்கும்.

எங்களது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்

http://www.humanitarian-srilanka.org/Knowledge_Centre/Publications.php

இந்த அறிக்கை மீதான உங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை வரவேற்கிறோம், அவற்றை பின்வரும் மின்னஞ்சல்/தபால் முகவரிக்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும்: feedback@cha.lk

மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பு
30/81, லோங்டன் பிளேஸ்,
கொழும்பு 7, இலங்கை.
தொலைபேசி/தொலைநகல் : 94-112506855/2598413